வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
11.05.2026 திங்கட்கிழமை
இதழ் : 125
பக்கங்கள் : 08




# தமிழக முதல்வராக நேற்று விஜய் பதவிப் பிரமாணம்!

## சென்னை நேரு அரங்கில் நிகழ்வு




சென்னை, மே. 11

தமிழக முதல்வராக நேற்று பதவியேற்றார் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சந்திரசேகர் ஜோசப் விஜய்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பதவியேற்பு விழா நடந்தது. வந்தே மாதரம் பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது, 3ஆவதாகவே தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

இதனையடுத்து தமிழகத்தின் 18ஆவது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சந்திரசேகர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

'சி.ஜோசப் விஜய் எனும் நான்' என்று விஜய் உறுதி மொழி கூறியபோது அரங்கம் முழுவதும் நிறைந்திருந்த த.வெ.க. தொண்டர்கள்

07

# கவனத்தை ஈர்த்த விஜய்யின் உரை!

சென்னை, மே. 11

முதலமைச்சராக பதவியேற்ற உடனேயே ஆற்றிய தனது முதல் உரை மற்றும் முதல் நாள் நடவடிக்கைகள் மூலமாக, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் பல் வேறு அரசியல் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார்.

அரசு திட்ட அறிவிப்புகள், முந்தைய அரசின் நிதி நிலை குறித்த விமர்சனங்கள், மதச்சார்பின்மை மற்றும் சிறுபான்மையினருக்கான வாக்குறுதி, கூட்டணி அரசியலுக்கான சைகை, "நான் சாதாரண மனிதன்" என்ற உணர்ச்சி ரீதியான அணுகுமுறை என விஜயின் முதல் உரை பல அடுக்குகளைக் கொண்ட அரசியல் அறிக்கையாக அமைந்தது.

07



# "மக்களை திசை திருப்பாதீர்கள்" விஜய்க்கு ஸ்டாலின் அறிவுரை!



சென்னை, மே. 11

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றுள்ள நிலையில், அவருக்கு முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் திரு. விஜய்க்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

07

# விஜய்யின் முதற்கட்ட அமைச்சரவை

சென்னை, மே. 11

தமிழக வெற்றிக் கழக அரசின் தவெக முதற்கட்ட அமைச்சர் பட்டியலை ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ளது.

அந்த பட்டியலில் கீழ்காணும் பெயர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளன:

புஸ்ஸி என்.ஆனந்த்
ஆதவ் அர்ஜுனா
கே.ஜி.அருண்ராஜ்
கே.ஏ.செங்கோட்டையன்
வெங்கடரமணன்
நிர்மல்குமார்
ராஜ்மோகன்
டி.கே.பிரபு
கீர்த்தனா

தமிழகத்தின் 18ஆவது முதல்வராக விஜய் பதவியேற்றார். அவருடன் இந்த 9 அமைச்சர்களும் பதவி ஏற்றனர். காங்கிரஸ் தரப்பில் ராஜேஷ்குமார், விஸ்வநாதன் உள்ளிட்டோர் அமைச்சர்களாக பதவியேற்க உள்ளதாக கூறப்பட்ட நிலையில் அவர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை.

(அ)

ஈழ தமிழர் விவகாரம்:

# தமிழக புதிய முதல்வர் விஜய்யிடம் கஜேந்திரகுமார் விடுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 11

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு, ஈழத்தமிழர்கள் சார்பாகத் தமிழ்த் தேசியப் பேரவை தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளதுடன் முக்கிய கோரிக்கை அடங்கிய கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

07

# தமிழக முதல்வர் விஜய்க்கு ஜனாதிபதி அநுர வாழ்த்து!



கொழும்பு, மே. 11

தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் தமது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளதாவது,

07

# 3 ஆவது இடம் பிடித்த தமிழ்த்தாய் வாழ்த்து!

## விஜய் அரசுக்கு எதிராக திரளும் விமர்சனங்கள்

சென்னை, மே. 11

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்ற விழாவில், தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்ட வரிசை தொடர்பாக புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ், சி.பி.ஐ., சி.பி.ஐ. (எம்) மற்றும் வி.சி.க

07

# "சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகள்" அனைத்து மாவட்டங்களுக்கும் நியமனம்!

## சுகாதாரத் துறையில் அதிரடி மாற்றம்

கொழும்பு, மே. 11

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தி, மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில், அனைத்து மாவட்டங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை "மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக" நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவினால் முன்வைக்கப்பட்ட

07

# வளமான ஈழத்தை அமைக்க விஜய் ஒத்துழைக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே. 11

வளம் மிக்க தமிழகம் மாத்திரமல்லாமல் வளமான ஈழத்தை அமைப்பதற்கும் விஜய் ஒத்துழைக்க வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை

07

# "மின் கட்டண உயர்வு மக்கள் மீதான சுமை"

## அரசுக்கு எதிராக சஜித் கண்டனம்

கொழும்பு, மே. 11

180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு 18 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரித்துள்ள அரசாங்கத்தின் தீர்மானம், மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய சுமையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் நாட்களில் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கக்கூடும்

## அனர்த்தங்கள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 11

எதிர்வரும் நாட்களில் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அனர்த்தங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர, டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மண் மேடுகள் இன்னும் அப்படியே காணப்படுவதாகவும், மண்சரிவு காரணமாக பெரிய மற்றும் நடுத்தர அளவிலான கற்கள் மேலெழுந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதனால் மிகக் குறைந்த மழையின் போது கூட, அந்தக் கற்கள் மீண்டும் சரிந்து விழக்கூடிய அபாயம் உள்ளதாக அவர் எச்சரித்தார்.

முன்பு மண்சரிவு அபாயம் இருந்து தற்போது செயலிழந்துள்ள இடங்கள் கூட, இனிவரும் மழை வீழ்ச்சியுடன் மீண்டும் அபாய நிலையாக மாறக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதை கருத்தில்கொண்டு, முதலாம் கட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேச செயலகப் பிரிவு, மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர மற்றும் வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவுகள் என பன அடையாளம் காணப்பட்டன.

இதேவேளை நீர்த்தேக்கங்களுக்கு அருகில் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் ஆய்வியல் பிரிவின் பிரதம பொறியியலாளர் சாமர யாபா ஆராச்சி கருத்து தெரிவிக்கையில், வானிலை அவதானிப்பு நிலையத்தின் தகவல்களுக்கு அமைய ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் குறித்து திணைக்களம் தீவிர அவதானம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

தற்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வசமுள்ள 9 பிரதான நீர்த்தேக்கங்களும், 5 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் வான்பாய்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய மழையினால் ஆறுகளின் நீர்மட்டம் ஓரளவுக்கு உயர்ந்துள்ள போதிலும், அவை இன்னும் அபாயக் கட்டத்தை எட்டவில்லை.

எவ்வாறாயினும் கிரிந்தி ஓயா, வலவை, தெதுரு ஓயா, மல்வத்து ஓயா, களனி மற்றும் களு ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், அந்தப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை அனர்த்த முகாமைத்துவ பிரிவானது 25 மாவட்டங்களிலும் செயல்பட்டு வருவதால், கடந்த 8ஆம் திகதி அனைத்து மாவட்ட பிரிவுகளையும் ஒருங்கிணைத்து, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலவரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி இது குறித்துக் கூறுகையில், தற்போது சமூக அடிப்படையிலான திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, நீர்நிலைகள் மற்றும் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மண்சரிவுக்கான அறிகுறிகள் குறித்து மக்கள் எப்போதும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொண்ட அவர், ஏதேனும் அவசர தேவைகள் இருப்பின் அனர்த்த மேலாண்மைப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 117 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அல்லது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். (எ)

மாணவர்களிடையே மர்ம காய்ச்சல்

# தெனியாயவில் 4 பாடசாலைகளுக்கு மேலும் இரண்டு நாட்கள் விடுமுறை!

கொழும்பு, மே 11

தெனியாய கல்வி வலயத்துக்குட்பட்ட நான்கு முக்கிய பாடசாலைகளில் மாணவர்களிடையே காய்ச்சல் மிக வேகமாக பரவி வருவதால், அந்த பாடசாலைகளை மேலும் இரண்டு நாட்களுக்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைய, காய்ச்சலை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷாகா ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதற்கமைய தெனியாய மத்திய கல்லூரி, தெனியாய ராஜபக்ஷ மகா வித்தியாலயம், தெனியாய செயின்ட் மெத்யூஸ் இருமொழி மகா வித்தியாலயம் மற்றும் பல்லேகம சித்தார்த்த வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும் இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலைகளில் மாணவர்களிடையே காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, முதற்கட்டமாக கடந்த 07 மற்றும் 8 ஆம் திகதிகளில் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன. எனினும், நிலைமையைக் கண்காணித்த சுகாதார அதிகாரிகள் மற்றும் தென் மாகாண கல்விச் செயலாளர் என். கே.ஆர். பத்திரண ஆகியோர் இணைந்து, காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த விடுமுறையை மேலும் நீடிக்க தீர்மானித்துள்ளனர். (எ)

# வடமாகாணத்தில் வேகமாக நலிவடையும் தன்னியக்க கண்காணிப்பு பொறிமுறை

## ஆளுநர் வேதநாயகன் கவலை

யாழ்ப்பாணம், மே 11

சமூகமட்ட அமைப்புகள் மூத்தோரின் முதிர்ந்த அறிவுரைகளுடன் இளையோர்களால் வழிநடத்தப்படும்போது, அந்தச் சமூகத்தில் ஒழுக்கப் பிறழ்வுகள் மறைந்து அறநெறி தழைத்தோங்கும். இத்தகைய தன்னியக்க கண்காணிப்புப் பொறிமுறை எமது மாகாணத்தின் பல கிராமங்களில் நலிவடைந்து வருவது கவலையளிக்கிறது- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 106ஆவது ஆண்டு நிறைவு விழாவும், கல்வி மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் சங்கத்தின் தலைவர் கி. கிருஷ்ணதாசன் தலைமையில் சனிக்கிழமை மாலை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒரு கிராமத்தின் நீடித்த வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சன சமூக நிலையங்களை போன்ற அடிப்படைச் சமூக அமைப்புகளின் காத்திரமான பங்களிப்பு மிக அவசியமாகும். முன்னைய காலங்களில் இத்தகைய அமைப்புகளின் சீரிய செயல்பாடுகளால் சமூகத்தின் இளையோர் மத்தியில் ஒழுக்க விழுமியங்கள் பேணப்பட்டன- என்றார். (எ)

# 9 முக்கிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று திறப்பு

கொழும்பு, மே 11

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையினால், 09 பாரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் 05 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்கள் தற்போது வான்பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.டி. ஹேரத் தெரிவிக்கையில், லுணுகம்வெஹெர, வெஹெரகல, இராஜாங்கனை மற்றும் தெதுறு ஓயா ஆகிய முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

லுணுகம்வெஹெர: 06 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விநாடிக்கு 4000 கன அடிக்கும் அதிகமான நீர் கிரிந்தி ஓயாவிற்கு திறந்து விடப்படுகிறது.

வெஹெரகல: 6 வான் கதவுகள் திறக்கப்பட்டு, மாணிக்க கங்கைக்குள் விநாடிக்கு 1400 கன அடி நீர் வெளியேற்றப் படுகிறது. இராஜாங்கனை: 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. விநாடிக்கு 9300 கன அடி நீர் கலா ஓயாவுக்குள் பாய்கிறது.

தெதுறு ஓயா: 4 வான் கதவுகள் ஊடாக விநாடிக்கு 5500 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

அலிகொட ஆரா: 3 வான் கதவுகள் திறக்கப்பட்டு கிரிந்தி ஓயாவுக்கு நீர் திறந்து விடப்படுகிறது. (எ)

# ஒரே நாளில் 589 பேர் கைது

கொழும்பு, மே 11

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை பொலிஸார் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது, 589 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கையின்போது 27,816 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 16 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணை களுக்கமைய 289 பேரும், திறந்த பிடியாணை களுக்கமைய 137 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# யாழ்தேவி ரயில் சேவை இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, மே 11

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை பயணிக்கும் யாழ்தேவி ரயில் இன்று முதல் மீண்டும் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரை யாழ் தேவி ரயில் பயணிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கான யாழ்தேவி ரயில் சேவை செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் மாத்திரம் நடைபெறும்.

இந்த ரயில் குளிரூட்டப்பட்ட 04 முதலாம் வகுப்பு பெட்டிகளை கொண்டதாகும்.

ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக அல்லது ஆசன முன்பதிவு வசதி கொண்ட ரயில் நிலையங்களுக்கு சென்று பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரச துறையில் டிஜிற்றல் மாற்றம் விசேட சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, மே 11

அரசின் டிஜிற்றல் பொருளாதாரத் திட்டத்தின் முக்கிய அங்கமாக, அரச துறையில் நிறுவன ரீதியிலான டிஜிற்றல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, பொதுச் சேவை மேம்படுத்தலுக்கான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிறுவன முன்னோடி வலையமைப்பு நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள்இ மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட பணிப்பாளர் நாயகங்கள், ஆணையாளர் நாயகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டபூர்வ சபைகள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு அரச நிறுவனமும், டிஜிற்றல் யுகத்தில் சிறந்த சேவையை மேம்படுத்துவதற்கு கூட்டாக பொறுப்பேற்கக்கூடிய நான்கு முன்னோடிகளை கொண்ட ஒரு குழுவை முழுப் பணியாளர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும்.

இந்த முன்னோடிகள் அந்தந்த நிறுவனங்களுக்குள் முன்னெடுக்கப்படும் டிஜிற்றல் மாற்றத்துக்கான செயல்முறையின் மைய சக்தியாக செயல்படுவார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் அரச துறை முழுவதும் பரவியுள்ள சுமார் 400 பேரை கொண்ட டிஜிற்றல் மாற்ற முன்னோடிகளின் தேசியக் குழு உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
11.05.2026 திங்கட்கிழமை

விசுவாவசு வருடம், சித்திரை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## எப்போதோ சொன்னோமே...!

மாகாணசபை தேர்தல்களை எந்த முறையில் நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அதன் அறிக்கையை மூன்று மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுதான் அதற்குரிய ஆணை.

ஆனால், முதல் அறிக்கையையே மூன்று மாதங்களில் தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் என்று ஹேரத் ஒரு கட்டத்தில் கூறியபோது தேர்தல்களை மேலும் தாமதிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் செயற்படுகின்றது என்பது தெளிவாகியது.

பத்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக நடத்தப்படாமல் இருக்கும் மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிக்காமல் விரைவாக நடத்துவதில் அரசாங்கத்துக்கு உண்மையில் அக்கறை இருக்குமானால், அதற்கு இருக்கக்கூடிய தெரிவு மிகவும் சுலபமானது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாத்திரம் அவற்றை நடத்துவதே அதுவாகும்.

அவ்வாறு தேர்தல்களை நடத்துவதற்கு வகை செய்யக்கூடியதாக முன்னைய பாராளுமன்றத்தில் எம்.ஏ. சுமந்திரன் தனிநபர் பிரேரணையின் வடிவில் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்தார். அதை நிறைவேற்ற முடியவில்லை.

தற்போதைய பாராளுமன்றத்தில் அதேபோன்ற சட்டமூலம் ஒன்றை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கொண்டுவந்தார். அதையும் நிறைவேற்றுவதற்கு உதவ அரசாங்கத்துக்கு விருப்பமில்லை.

சாணக்கியனின் சட்டமூலத்தை நிறைவேற்றி மாகாண சபை தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கத்துக்கு ஏதாவது " கௌரவப் பிரச்சினை " இருந்தால் தானாகவே ஒரு சட்ட மூலத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல்களை நடத்தலாம். அதையும் செய்ய அரசாங்கம் தயாராயில்லை.

இத்தனைக்கும் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருடத்திற்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக தேசிய தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற தெரிவுக்குழு மூன்று மாதங்களில் அதன் அறிக்கையை வெளியிடவில்லை என்றால் அதில் இருந்து வெளியேறுவது குறித்து சிறுபான்மைச் சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் உறுப்பினர்களாக மனோ கணேசன், நிசாம் காரியப்பர், சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் யோசித்து வருவதாக நேற்றைய தினம் செய்திகள் வெளியாகியிருந்தன.

அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்ததன் நோக்கம் மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிப்பதே என்ற சந்தேகம் இருந்தால் சிறுபான்மைச் சமூக கட்சிகளைச் சேர்ந்த அதன் உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தலை நடத்துவதே தற்போதைய சூழ்நிலையில் நடைமுறைச் சாத்தியமான வழி என்று சுட்டிக்காட்டி, காலத்தைக் கடத்தும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க முடியாது என்று கூட்டாக அறிக்கையை வெளியிட்டுவிட்டு வெளியேறுவது அரசாங்கத்துக்கு ஓரளவுக்கேனும் நெருக்குதலைக் கொடுப்பதற்கான ஒரு வழிமுறையாக இருக்கும் என்று ஈழநாடு இரு மாதங்களுக்கு முன்னரே இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தது. இன்று அதை தவிர்க்க முடியாத வகையில் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

# விஜய்யின் கூட்டணி நடனம்; தி.மு.க.வின் பிடியில் சில கயிறுகள்

நீண்ட கால பிரசாரத்துக்கும் ஒரு கூட்டணியை உருவாக்குவதற்கான தொடர் முயற்சிகளுக்கும் பிறகு, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி. ஜோசப் விஜய் இறுதியாக தமிழக முதல்வராகப் பதவியேற்றிருக்கிறார். இனிமேல் சட்டசபையில் தனது பெரும்பான்மையை அவர் நிரூபிக்க வேண்டும்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவுதான் தலா இரண்டு உறுப்பினர்கள் - த.வெ.க. ஆட்சி அமைக்கத் தேவையான பலத்தை வழங்கியது. ஆனால், ஆச்சரியப்படும் விதமாக, த.வெ.க. வின் முக்கிய எதிரியான திராவிட முன்னேற்ற கழகத்துனான உறவை முற்றிலும் அந்த கட்சிகள் துண்டித்துக் கொள்ளாமலேயே விஜய்க்கு ஆதரவளிப்பதாக இந்த கூறுகின்றன.

உண்மையில், வி.சி.க. இது குறித்து வெளிப்படையாகவே கூறியுள்ளது: "மாநிலத்தில் அரசியலமைப்பு நெருக்கடி ஏற்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி வருவதை நாங்கள் விரும்பவில்லை, அதனால் தான் விஜய்க்கு ஆதரவளிக்கிறோம்," என்று அவர் கூறினார். வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் சனிக்கிழமை மு.க. ஸ்டாலினை சந்தித்துப் பேசினார். அப்போது, "தவெ.க. வை ஆதரிக்கும் எங்கள் முடிவை நான் தெரிவித்த போது, ஸ்டாலின் எங்களைத் தடுக்கவில்லை," என்று அவர் கூறினார்.

இதேபோல், முஸ்லிம். லீக் கட்சியும் தி.மு.க. விற்கு நெருக்கமான செய்தியையே விடுத்துக்கொண்டு த.வெ.க. அரசுக்கு ஆதரவளிக்கிறது.

இந்திய அரசியலிலேயே இதுதான் முதல் முறையாக இருக்கலாம் இரண்டு சிறிய கட்சிகள், முக்கிய எதிர்க்கட்சியான தி.மு.க. வுடனான உறவைத் துண்டிக்காமல் த.வெ.க. அரசுக்கு ஆதரவளிக்கின்றன. விஜய் அரசு தனது எண்ணிக்கைக்கு வி.சி.க. மற்றும் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளையே நம்பியுள்ளது.

விஜய் நான்கு முறை ஆளுநர் மாளிகைக்குச் செல்ல வேண்டியிருந்தது, ஆதரவுக் கடிதங்களுக்காகக் காத்திருக்க வைக்கப்பட்டது, மேலும் அரசியலின் நிதர்சனமான மறு பக்கத்தை அவரும் கட்சியும் நேரடியாகச் சந்திக்க வேண்டியிருந்தது.

### அங்கேயும் இங்கேயும்...

தற்போது த.வெ.க. விற்கு 120 சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது (த.வெ.க. 107, காங்கிரஸ் 5, இடதுசாரிகள் 4, மற்றும் வி.சி.க., இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தலா 2). தவெ.க. வை ஆட்சி அமைக்க விடாமல் தடுக்க தி.மு.க மற்றும் அ.தி.மு.க . எடுக்கும் எந்த முயற்சிக்கும் நாங்கள் துணைபோக மாட்டோம் என்று இடதுசாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்னர். இருப்பினும், அத்தகைய முயற்சி குறித்து தி.மு.க.வின் உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவிற்காகக் காத்திருந்த பின்னரே அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

காங்கிரஸ் கட்சி மட்டுமே தன்னிச்சையாகவும் ஆக்ரோஷமாகவும் தி.மு.க. வுடனான தனது உறவைத் துண்டித்துள்ளது. இருப்பினும், காங்கிரஸ் சட்டசபை உறப்பினர்கள் திமு.க.வுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளனர் மேலும் பல ஆண்டுகளாக தி.மு.க.வின் நிதியிலும் ஆதரவிலுமே, அவர்கள் செயல்பட்டு வந்தனர்.

இந்தச் சூழல், விஜய்யின் "சர்க்கார். (அரசாங்கம்), இன்னும் தி.மு.க. வுடன் நெருக்கமாக இருக்கும் கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலையை உருவாக்குகிறது. முக்கிய எதிர்க்கட்சியான திமுக, த.வெ.க.வை ஒழிக்கத் துடிக்கிறது. தி.மு.க . மற்றும் த.வெ.க. இடையிலான பகை மிகவும் ஆழமானது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து த.வெ..க. வை அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்கும் திமுகவின் முயற்சி தோல்வியடைந்ததற்குக் ஒரே காரணம், அந்தக் கட்சியின் ஒரு பெரும் பிரிவினர் அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுதான். அந்த முயற்சி தோல்வியடைந்த பின்னரே இடதுசாரிகளும் மற்றவர்களும் த.வெக.வை ஆதரிக்க முன்வந்தனர்.

### அரசியல் சதுரங்கம்

சட்டசபையில் 47 ஆசனங்களைக் கொண்ட மூன்றாவது பெரிய கட்சியான அ.தி.மு.க.வும், 59 கொண்ட இரண்டாவது பெரிய கட்சியான தி.மு.க.வும், த.வெ.க.வை வீழ்த்த ஒன்றிணையத் தயாராக இருப்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இருப்பினும், தற்போது பொதுமக்களின் உணர் வும் வாக்குகளும் த.வெ.க.விற்கு ஆதரவாக இருப்பதால், விஜய் பதவியேற்பதைத் தடுக்க எடுக்கும் எந்த முயற்சியும் அவர்களுக்குப் பின்னடைவாகவே முடியும்.

இதன் காரணமாகவே எந்த அரசியல் கட்சியும் விஜய் "சர்க்கார்" அமைப்பதைத் தடுக்கவில்லை. காங்கிரஸ் கூட்டணியுடன் த.வெ.க. ஆட்சியில் இருப்பதை விரும்பாத பாரதிய ஜனதா கூட, த.வெ.க. , அ. தி.மு.க. கூட்டணியையே விரும்பியது. ஆனால், விஜய் தனது தனிப்பாதையில் உறுதியாக நிற்கிறார்.

கொள்கை உறுதிப்பாடு மற்றும் அடிப்படை நம்பிக்கைகளே தங்கள் அரசியலின் அடிப்படை என்று முழக்கமிட்டாலும், அதிகாரத்தின் மீதான ஆசையும், பிழைப்புக்கான தேடலும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு துருவங்களையும் கூட பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்துவிடும் என்பதை இது காட்டுகிறது.

சபையில் விஜய் தனது பெரும்பான்மையை நிரூபிப்பார். ஏனெனில், இப்போது அவரது அரசாங்கத்தைக் கவிழ்ப்பது தி.மு.க. விற்கு மக்கள் மத்தியில் கெட்ட பெயரை உண்டாக்கும். எனினும், பழைய திராவிடக் கட்சியான தி.மு.க., விஜய்யை வீழ்த்த சரியான தருணத்திற்காக ஒரு பருந்தைப் போலக் காத்திருக்கும். விஜய்யின் ஆட்சிக்குள்ளேயே தி.மு.க.வின் பழைய கூட்டாளிகள் இருப்பதால், சூப்பர் ஸ்டார் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தற்போதுள்ள எண்ணிக்கையை வைத்துக்கொண்டு ஒரு நல்லாட்சியை வழங்குவதும், பின்னர் தீர்க்கமான ஒரு வெற்றியைப் பெற மீண்டும் மக்களிடம் செல்வதுமே த.வெ..க. வின் உத்தியாகத் தெரிகிறது. இந்த அணுகுமுறை பாரம்பரிய அரசியல் சக்திகளை அழிப்பதாக அமையும் என்பதால், இது அவர்களுக்கு ஒரு வாழ்வா-சாவா போராட்டமாகும்.

அ.தி..மு.க..வின் சில பிரிவினரும் த.வெ.க.வை நோக்கி ஈர்க்கப்பட வாய்ப்புள்ளது. அ.தி.மு.க.வில் உள்ள மூத்த தலைவர்களின் முடிவு, விஜய் அவர்களுக்கு என்ன வழங்குகிறார் என்பதைப் பொறுத்தே அமையும். விஜய் இனி அரசியல்வாதிகள் தன்னைத் தேடி வருவார்கள் என்று காத்திருக்க முடியாது் அவரே இறங்கிச் சென்று ஆதரவைத் திரட்டும் அரசியல்வாதியாக மாற வேண்டும்.

### பரிணாம வளர்ச்சி

கடந்த மூன்று நாட்கள் அவருக்கு ஒரு அக்னிப் பரீட்சையாகவும், பாடமாகவும் அமைந்தன. வீட்டில் அமர்ந்து அரசாங்கத்தை அமைத்துவிட முடியாது என்பதையும், வெறும் நட்சத்திர அந்தஸ்தை வைத்து மட்டும் கூட்டணிகளை வென்றுவிட முடியாது என்பதையும் அவர் உணர்ந்திருப்பார். அவர் கூட்டணிக் கட்சியினரை நேரில் சந்தித்துப் பேச வேண்டியிருந்தது. ஆளுநர் மாளிகைக்கு அவர் அடிக்கடி செல்ல வேண்டியிருந்தது் நிஜ அரசியல் எப்படி இருக்கும் என்பதன் "டிரெய்லர்" அவருக்குக் காட்டப்பட்டது.

அரசாங்கத்தை அமைப்பதே இவ்வளவு கடினம் என்றால், அதை வெற்றிகரமாக நடத்துவது இன்னும் சவாலான காரியம். குறிப்பாக, இது ஒரு கூட்டாட்சி - அதுவும் அவரது பரம எதிரிகள் சில சரடுகளைக் கையில் வைத்திருக்கும் ஒரு கூட்டாட்சி.

முதலமைச்சர் விஜய்யின் முன்னால் பெரும் சவால்கள் காத்திருக்கின்றன. அவரது ஒவ்வொரு நகர்வும், ஒவ்வொரு தவறும் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். அவருக்கு இப்போது மிகப்பெரிய மக்கள் ஆதரவு இருக்கிறது. ஆனால், ஒரு திரை நட்சத்திரத்திலிருந்து மக்கள் தலைவராகவும், தகுதியான முதலமைச்சராகவும் அவர் எப்படிப் பரிணமிக்கிறார் என்பதுதான், இந்த மக்கள் ஆதரவு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைத் தீர்மானிக்கும்.

அவர் தனது படங்களில் மிகச்சிறந்த நடனக் கலைஞராக இருக்கலாம், ஆனால் இப்போது அவர் "கூட்டணி. ஆட்டம் எனும் அரசியல் நடனத்தைக் கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

(டி.எம். வீரராகவ், என்.டி.ரி.வி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மே - 11 திங்கக்கிழமை**
பராபவ வருடம் - சித்திரை 25
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர்இழுத்தடிப்பார்கள்.

**கடகம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**கன்னி**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவுபெருகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வுகிடைக்கும். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விஷயங்களை முன்னின்று நடத்துவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**கும்பம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். கோபம் எரிச்சல் அடையலாம். நிதானம் தேவைபடும் நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள்.பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள் உங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார்.

# இந்திர விழாவில் சுகாதார சீர்கேட்டுடன் உணவு விற்றவர்களுக்கு பிடியாணை!

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்திர விழாவில் சுகாதார சீர்கேட்டுடன் உணவுப் பொருட்களை விற்பனை செய்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 06 உணவு விற்பனையாளர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் கடந்த முதலாம் திகதி இந்திர விழா மிக சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, சுகாதார சீர்கேடுகளுடன் உணவுகளை கையாண்டு விற்பனை செய்த ஐஸ்கிறீம் வாகனங்கள், காரம் சுண்டல் மற்றும் பானிப்பூரி விற்பனை நிலையங்கள் உள்ளடங்கலான 12 உணவு விற்பனையாளர்களுக்கு எதிராக சுகாதார பரிசோதகரினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த 12 பேருக்கும் எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்த நிலையில் குறித்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

இதன்போது 06 பேர் மன்றில் முன்னிலையாகி தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்கள் 06 பேருக்கும் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

மன்றில் முன்னிலையாகாத 06 பேருக்கும் எதிராக மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. (எ)

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பொன்விழா: வவுனியாவில் முக்கிய ஆலோசனைக்கூட்டம்



வவுனியா, மே 11

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள "வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு" தொடர்பான மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் முக்கிய சந்திப்பு நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழர் தாயகத்தின் 8 மாவட்டங்களையும் சேர்ந்த ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்துடன், மாநாட்டிற்கான தீர்மானங்கள், திட்டமிடல்கள் மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக மே 14, 2026 முதல் மே 14, 2027 வரையான காலப்பகுதி "வட்டுக்கோட்டை பிரகடன பொன்விழா ஆண்டாக" உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுதப்பட்டுள்ளது.

மேலும், இப்பொன்விழா ஆண்டின் ஆரம்ப நிகழ்வு மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டையில் நடைபெறவுள்ளன. அத்தோடு ஜூன் மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வேலன் சுவாமிகள் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் அருட்தந்தையர்கள், தமிழர் தாயகத்தின் 08 மாவட்டத்தை சேர்ந்த ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முள்ளிக்குளம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளருக்கு தண்டப்பணம்

மன்னார், மே 11

மன்னார் - முள்ளிக்குளம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று முன்னறிவித்தல் இன்றி சேவையில் ஈடுபடாமை மற்றும் பயணிகளுடன் குறித்த பஸ் நடத்துநர் முரண்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக, பஸ் உரிமையாளருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ. விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பஸ் முன்னறிவிப்பு ஏதுமின்றி தனது சேவையை புறக்கணித்தமையால், அந்த வழித்தடத்தை பயன்படுத்தும் பொது மக்கள் எனப் பலரும் வீதியில் காத்திருந்து பெரும்அசௌகரியங்களுக்கு உள்ளா கியிருந்தனர்.

அத்துடன், சேவை புறக்கணிப்பு தொடர்பில் கேள்வியெழுப்பிய பயணிகளுடன் குறித்த பஸ் நடத்துநர் முறையற்ற விதத்தில் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி முரண்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பயணிகளால் அதிகார சபைக்கு கொண்டுவரப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், போக்குவரத்து அதிகார சபை ஊடாக துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணையின்முடிவில், வீதிப் பயணிகள்போக்குவரத்து அதிகார சபையின் விதிமுறைகளை மீறி, பயணிகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் சேவையை துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய குற்றங்களுக் காக குறித்த தனியார் பேருந்துக்கு 4000 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன், இனிவரும் காலங்களில் பயணிகள் சேவையின் போது இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால், குறித்த பேருந்தின் சேவை அனுமதி பத்திரம் முற்றாக இரத்து செய்யப்படும் எனவும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுப் போக்குவரத்தின் போது பயணிகள் சேவையில் ஈடுபடும் தரப்பினரால் முறைகேடுகள் இடம் பெற்றாலோ அல்லது அதிக கட்டணம் அறவிடப்பட்டாலோஇ பொதுமக்கள் தகுந்த ஆதாரங்களுடன் (பயணச்சீட்டு, ஒளிப்படங்கள் அல்லது காணொலிகள்) அதிகார சபையின் 071, 9090900 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு உடனடியாக தெரியப்படுத்த முடியும் . (எ)

# இளம் குடும்பஸ்தர் கடத்தி தாக்கப்பட்டமை தொடர்பில் மூன்று ஓட்டோ சாரதிகள் கைது

வவுனியா, மே 11

வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் கடத்தி தாக்கப்பட்டமை தொடர்பில் மூன்று ஓட்டோ சாரதிகள்கைது செய்யப்பட்டனர்.

வவுனியா, புதிய பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றில் இருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை ஓட்டோவில் கடத்தப்பட்டு புதிய பஸ் நிலையத்துக்கும், சோயா வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வயல் நிலப் பகுதியில் மூன்று மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்தின் போது அவரிடம் இருந்து கடிதம் ஒன்றில் கையொப்பம் பெறப்பட்டிருந்ததுடன், அவரது தொலைபேசியில் இருந்த ஆவணங்களும் அழிக்கப்பட்டிருந்ததாக பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த கடத்தல் மற்றும் தாக்குதல் சம்பவத்து டன் தொடர்புடையதாக 3 ஓட்டோ சாரதிகளை கைது செய்ததுடன், மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவ டிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 4 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருளுடன் இளைஞன் கைது!

கொழும்பு, மே 11

04 கோடியே 77 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய ஹஷீஷ் ரக போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இளைஞன் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் எனவும், இவர் விற்பனை உதவியாளராக பணியாற்றி வருபவர் எனவும் தெரியவந்துள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து தாய் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ரி.எவ்-307 என்ற விமானம் மூலம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இவர் கட்டுநாயக்கவை வந்தடைந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதியை சோதனையிட்ட போது, சொக்லேட் என பொதி செய்யப்பட்ட 15 பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 04 கிலோகிராம் 778 கிராம் ஹஷீஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், அவரைத் தடுப்புக் காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.(எ)

# தெனியாய பாடசாலைகளுக்கு தொடர்ந்து விடுமுறை அறிவிப்பு

கொழும்பு, மே 11

பாடசாலை மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் காய்ச்சல் நிலைமை காரணமாக, ஏற்கனவே மூடப்பட்டிருந்த தெனியாய கல்வி வலயத்துக்குட்பட்ட நான்கு பாடசாலைகளை தொடர்ந்தும் மூடி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய, நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷாகா ஹெட்டிகொட தெரிவித்தார்.

இதன்படி, தெனியாய மத்திய கல்லூரி, தெனியாய ராஜபக்ஷ மகா வித்தியாலயம், தெனியாய புனித மத்தியூஸ் இருமொழிப் பாடசாலை மற்றும் பல்லேகம சித்தார்த்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும் என குறிப்பிட்டார்.

மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் இந்தக் காய்ச்சல் நிலைமை காரணமாக கடந்த 7 ஆம் திகதி முதல் குறித்த பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. (எ)

# கொழும்பு துறைமுகம் கடற்பரப்பில் சடலம் மீட்பு

கொழும்பு, மே 11

கொழும்பு துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் சடலம் ஒன்று காணப்படுவதாக கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் ஆள் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவர் சுமார் 5 அடி 6 அங்குலம் உயரமானவர் எனவும், குட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி மற்றும் தாடி வைத்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் உயிரிழந்த போது கறுப்பு நிற அரைக்காற்சட்டை மற்றும் பழுப்பு நிற ரீ-சேர்ட் அணிந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மன்னாரில் 7 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

மன்னார், மே 11

மன்னார் - உயிலங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில், வட மாகாண குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, பாரியளவு கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 07 கிலோ 320 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உயிலங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியாவை சேர்ந்த 49 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# போதைப்பொருட்களுடன் மேலும் 884 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 11

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், சனிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக் கப்பட்ட சோதனை நடவடிக் கைகளில் 884 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய் யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 09 பேர் கைது செய்யப்பட்டதுடன், 893 விசேட சோதனைகள் நடத்தப்பட்டன.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொ ருட்களையும் பொலிஸார் கைப் பற்றினர்.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 226 கிராம் ஹெரோயின், 500 கிராம் ஐஸ், 13 கிலோ 608 கிராம் கொக்கைன், 02 கிலோ 423 கிராம் கஞ்சா, 120,788 கஞ்சா செடிகள், 521 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 05 கிலோ 286 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 1396 போதை மாத்திரைகள், 82 கிராம் மதனமோதகம் மற்றும் 66 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தரமற்ற கம்பிகளை தயாரித்த தொழிற்சாலைக்கு சீல் வைப்பு

கொழும்பு, மே 11

தரமற்ற இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்த தொழிற்சாலை ஒன்றுக்கு சீல் வைக்க நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டாயமான எஸ். எல். எஸ். தரச்சான்றிதழ் இன்றி, தரமற்ற இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்து வந்த ஹோமாகம கைத்தொழில் வலையத்தில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றுக்கே இவ்வாறு சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

கிடைத்த தகவலொன்றுக்கு அமைய, குறித்த அதிகார சபையின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் இந்தத் தொழிற்சாலையில் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, இந்தத் தொழிற்சாலை சுமார் மூன்று வருடங்களாக இந்த இடத்தில் இயங்கி வந்தமையும், அவர்கள் தமது ஏனைய உற்பத்திகளுடன் சேர்த்து 6 மில்லி மீற்றர் அளவிலான தரமற்ற இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்து சந்தைக்கு விநியோகித்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இரும்புக் கம்பிகளுக்கான இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் சான்றிதழ் இன்றி, இந்த இரும்புக் கம்பித் தொகுதியை உற்பத்தி செய்து சந்தைக்கு விநியோகித்த காரணத்தால், குறித்த நிறுவனத்துக்கு சீல் வைக்க நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருகோணமலையில் அமைந்துள்ள 4 எண்ணெய் தாங்கிகள் புனரமைப்பு

கொழும்பு, மே 11

திருகோணமலை சீனக்குடாவில் அமைந்துள்ள எண்ணெய் தாங்கித் தளத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசமுள்ள 24 தாங்கிகளில், நான்கு தாங்கிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்தார்.

இதேவேளை, 60 ஆண்டுகள் பழமையான சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயமாக்கி, அதன் உற்பத்தித் திறனை விரிவாக்கம் செய்வதற்கு முன்னதாக, அதன் முழுமையான வணிகப் பெறுமதியை கணிப்பிடுவதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு சர்வதேச நிறுவனங்களிடம் இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான கேள்விப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதியுடன் கால எல்லை நிறைவடையவுள்ளது.

தற்போது நாளொன்றுக்கு 50,000 பீப்பாய்களை சுத்திகரிக்கும் திறன் கொண்ட இந்த நிலையத்தை, அதிகரித்து வரும் எரிபொருள் தேவை மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் தரங்களுக்கு அமைவாக 100,000 பீப்பாய்களாக அதிகரிப்பதே இந்த விரிவாக்கத் திட்டத்தின் முக்கிய இலக்காக இருப்பதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கையானது நிலையத்தின் பௌதீக சொத்துக்கள், நிதிச் செயற்பாடு மற்றும் எதிர்கால முதலீட்டுத் திட்டங்களுக்கான வெளிப்படையான அடித்தளத்தை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்தத் தாங்கிகள் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில், அவற்றின் அடிப்பகுதி மற்றும் ஏனைய தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர் செய்யும் பணிகள் 180 நாட்களுக்குள் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை வரை 12.78 பில்லியன் ரூபாய் செலவில் புதிய எரிபொருள்விநியோகக்குழாய் பாதையை அமைப்பதற்கான சர்வதேச கேள்விப்பத்திரத்தைக் கோருவதற்கான நடைமுறைகளும், முத்துராஜவெல மற்றும் கொலன்னாவை பகுதிகளில் புதிய சேமிப்புத் தாங்கிகளை நிர்மாணிக்கும் பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# மின்சார கட்டணம் மீண்டும் அதிகரிப்பு நிலக்கரி ஊழலை மறைக்கும் நாடகம்

கொழும்பு, மே 11

நாட்டின் மின்சாரக் கட்டணத்தை மீண்டும் 18 வீதத்தால் அதிகரித்துள்ள தீர்மானமானது, நிலக்கரி இறக்குமதியின் போது இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகளை மறைப்பதற்காகவும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகவும் முன்னெடுக்கப்பட்ட ஒரு நாடகமென மின்சாரப் பாவனையாளர் சங்கத்தின் தலைவர் எம்.டி. ஆர். அதுல குற்றம்சாட்டியுள்ளார்.

மின்சார நுகர்வோர் சங்கத்தின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊடாக மின் சாரப் பாவனையாளர்களுக்கு, குறிப்பாக 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்துபவர்களுக்கு ஒரு பாரிய சுமை ஏற்பட்டுள்ளது. அதாவது மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தால் உயர்த்தியுள்ளனர்.

இதற்காக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்வைக்கும் காரணங்கள் மிகவும் விந்தையானவை.

காலநிலை மாற்றம் காரணமாக நீர் மின் உற்பத்தி குறைந்துள்ளதாகவும், உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதாகவும், அதிகரித்த வெப்பம் காரணமாக மின்சாரத்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறுகிறார். ஆனால், நுரைச்சோலை நிலக் கரி மின் உற்பத்தி நிலையத்துக்கு என்ன நடந்தது என்பது பற்றி அவர் வாய் திறக்கவில்லை.

தற்போது மின்சாரத் தட்டுப்பாடு நிலவுவதற்கு உண்மையான காரணம், தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்தமையாகும். இதனால் மின் உற்பத்தி நிலையங்கள் முறையாக இயங்கவில்லை. - என்றார். (எ)

# பதுளை, மொனராகலைக்கு மண்சரிவு எச்சரிக்கை

பதுளை, மே 11

பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேச செயலகப் பிரிவுக்கும், மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர மற்றும் வெல்லவாய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் முதலாம் கட்டத்தின் கீழ் இந்த மண்சரிவு அபாய முன் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மண்சரிவு தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றுள்ளது.(எ)

# கடலில் விபத்துக்குள்ளான மீனவரை விரைந்து மீட்ட இலங்கை கடற்படை

கொழும்பு, மே 11

தெற்கு கடற்பரப்பில் பல நாள் மீன்பிடி படகில் தொழில் நிமித்தம் ஈடுபட்டிருந்த போது காயமடைந்த மீனவர் ஒருவரை, இலங்கை கடற்படையினர் துரிதமாகச் செயல்பட்டு மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கடந்த 03ஆம் திகதி காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 07 மீனவர்களுடன் குறித்த பல நாள் மீன்பிடி படகு கடலுக்குச் சென்றிருந்தது. தெற்குக் கடற்பரப்பிலிருந்து சுமார் 81 கடல் மைல் தொலைவில் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, படகிலிருந்த மீனவர் ஒருவர் திடீரென காயமடைந்துள்ளார்.

கொழும்பிலுள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, மீட்புப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இதன்படி, அந்தப் பகுதிக்கு அருகில் பயணித்துக்கொண்டிருந்த 'ஆவு ஆயுருஜ' என்ற வர்த்தகக் கப்பலின் உதவியுடன் காயமடைந்த மீனவர் முதலில் மீட்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, தென்னிலங்கை கடற்படை கட்டளைப் பிரிவிற்குச் சொந்தமான விசைப் படகு ஒன்று குறித்த பகுதிக்கு விரைந்து சென்று, வர்த்தகக் கப்பலிலிருந்து மீனவரைப் பொறுப்பேற்றது.

கடற்படை வீரர்களால் மீனவருக்கு முதலுதவி வழங்கப்பட்ட நிலையில், அவர் உடனடியாக காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டார். பின்னர், மேலதிக சிகிச்சைக்காக காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ)






# ஐஸ், ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் குழு காரைதீவில் மாட்டியது

காரைதீவு, மே 11

நீண்டகாலமாக சூட்சுமமாக கடல் மற்றும் தரைவழியாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் உள்ள சந்தேகத்துக்கிடமான வீடு ஒன்றில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது குறித்த இரண்டு சந்தேக நபர்களும் அம்பாறை மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எம். பிரியங்கர தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.



அத்துடன் கைதான சந்தேக நபர்களில் கடற்குதிரை என பட்டப்பெயருடன் அழைக்கப்படும் சந்தேக நபரிடம் இருந்து 50 கிராம் ஐஸ் போதைப் பொருளும் மற்றுமொரு சந் தேக நபரிடம் இருந்து 20 கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் 5 கிராம் 250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பறிமுதல் செய்யப்பட்டது.

குறித்த கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட மோட்டார் சைக்கிள், 80 ஆயிரம் ரூபாய் பணம், இலத்திரனியல் தராசு, நவீன கைத்தொலை பேசிகள் என்பனவும் மீட்கப் பட்டன.

இதன்போது 40 மற்றும் 31 வயது மதிக்கத்தக்க குறித்த இரு சந்தேகநபர்களில் ஒருவர் தலைமுடி வெட்டும் தொழில் செய்பவர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த சந்தேதக நபர்கள் புத்தளம், மன்னார் மாவட்டங்களில் இருந்து தரை மற்றும் கடல் வழியாக போதைப் பொருட்களை கடத்தி விற்பனை செய்பவர்கள் என விசாரணை அதிகாரிகள் தெரிவித் தனர்.(எ)

## கண்டி - மஹியங்கனை பிரதான வீதியில் விபத்து

கண்டி, மே 11

கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் உடுதும்பர, நிசருவ பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டியிலிருந்து மஹியங்கனை நோக்கிப் பயணித்த லொறி ஒன்றும், அதற்கு எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்தது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரை உடுதும்பர வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்த போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உயிரிழந்தவர் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒருவராவார்.

# பஸ்ஸுக்கு முன்னால் சரிந்து விழுந்த மரம்!

## மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள்

நுவரெலியா, மே 11

கடும் மழை காரணமாக மட்டக்களப்பிலிருந்து பிபிலை ஊடாக ஹற்றன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்றுக்கு முன்னால், பசறை பகுதியில் பெரிய மரம் ஒன்று சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10. 45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மரம் வீதியில் சரிந்து விழுந்த போதிலும், பஸ் சாரதியின் துரித செயல்பாட்டினால் பஸ் உடனடியாக நிறுத்தப்பட்டது. இதனால் ஏற்படவிருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்டதுடன், பஸ்ஸிலிருந்த பயணிகள் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

இதனை தொடர்ந்து, பஸ்ஸில் பயணித்த பயணிகள், மரத்தை வெட்டி அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். சுமார் அரை மணி நேரத்துக்குள் வீதி சீர்செய்யப்பட்டதை தொடர்ந்து, பஸ் மீண்டும் தனது பயணத்தை தொடர்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழக முதல்வராக...

ஆர்ப்பரித்தனர்.

இந்த நிகழ்வில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் ஆளுநர் தமிழிசை, கூட்டணி கட்சித் தலைவர்கள், விஜய்யின் பெற்றோர் எஸ்.ஏ.சந்திரசேகர், ஷோபா சந்திரசேகர், நடிகை திரிஷா, தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, விஜய்யின் நண்பர்கள், உறவினர்கள், திரையுலக, அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்பதால், 10 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தேவைப்பட்ட நிலையில், அவருக்கு காங்கிரஸ், சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் ஆதரவளித்தன. விடுதலை சிறுத்தைகள் கட்சி நேற்று முன்தினம் மாலை ஆதரவுக் கடிதத்தை வழங்கியது. தொடர்ந்து ஐ.யூ.எம்.எல். கட்சியும், கடைசி நேரத்தில் த.வெ.கவுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்து கடிதம் வழங்கியது. அதன்படி, த.வெ.கவுக்கு பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்களை விட அதிகமாக ஆதரவு கிடைத்தது.

நேற்று முன் தினம் மாலை 6.15 மணிக்கு விஜய்க்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார். இதையடுத்து, விஜய் ஆளுநர் மாளிகைக்கு சென்றார். ஏற்கனவே அங்கு வந்து காத்திருந்த காங்கிரஸ், இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுடன் சென்று ஆளுநரை விஜய் சந்தித்தார். அப்போது, 120 எம்.எல்.ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை ஆளுநரிடம் விஜய் வழங்கினார்.

தொடர்ந்து, அரசியலமைப்பு சட்டப் பிரிவு 164 இன் கீழ் விஜய்யை முதல்வராக நியமனம் செய்து அதற்கான ஆணையை ஆளுநர் அர்லேகர் வழங்கினார். ஆட்சி அமைக்கவும் விஜய்க்கு அழைப்பு விடுத்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## கவனத்தை ஈர்த்த...

உரையுடன் மட்டுமல்லாமல், அவரது முதல் நாள் நடவடிக்கைகளும் அரசியல் குறியீடுகளாகப் பார்க்கப்படுகின்றன. பதவியேற்பு விழாவிற்கு பிறகு தலைமைச் செயலகம் சென்று அதிகாரபூர்வ பணிகளை தொடங்கிய விஜய், பின்னர் பெரியார் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

திமுக - அதிமுக என சுமார் அறுபது ஆண்டுகளாக மாறி மாறி நீடித்த தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கத்தை உடைத்து ஆட்சிக்கு வந்துள்ள விஜய், தனது முதல் நாளிலேயே அடுத்த கட்ட அரசியல் திசை என்ன என்பதை காட்ட முயன்றுள்ளார்.

முதல்வராக ஆற்றிய உரையில் மிக முக்கிய அரசியல் செய்தியாக பார்க்கப்படுவது, முந்தைய அரசின் நிதி நிலையை விஜய் நேரடியாக விமர்சித்ததே.

முந்தைய அரசு கஜானாவை காலி செய்துவிட்டு சென்றுவிட்டதாகவும், வெள்ளை அறிக்கை வெளியிடனும் என்று நினைப்பதாகவும் கூறிய விஜய், மக்கள் தனக்கு கொஞ்சம் அவகாசம் தந்தால் அது உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

"தமிழக அரசின் நிதிநிலையை முழுமையாகப் புரிந்துகொள்ள விஜய்க்கு ஒரு கால அவகாசம் தேவைப்படும். அதை அவர் வெளிப்படையாகவும் கேட்டுள்ளார்," என்கிறார் பத்திரிகையாளர் குபேந்திரன்.

"ஆட்சியின் தொடக்கத்திலேயே பொருளாதார சவால்களுக்கு முன்னாள் அரசைப் பொறுப்பாக்கும் அரசியல் நிலைப்பாட்டை விஜய் எடுத்துள்ளார். இது, எதிர்காலத்தில் நிதி நெருக்கடி அல்லது வாக்குறுதிகள் அமலாக்கத்தில் ஏற்படக்கூடிய தாமதங்களுக்கு முன்கூட்டியே அரசியல் விளக்கத்தை உருவாக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது," என்கிறார் அரசியல் ஆய்வாளர் ராமு மணிவண்ணன். (அ)

## அநுர வாழ்த்து...

இலங்கையும் தமிழ்நாடும் வரலாறு, கலாசாரம், வணிகம் மற்றும் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மக்களுக்கிடையிலான நெருக்கமான உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையும் இந்தியாவும் மென்மேலும் நெருக்கமான உறவுகளையும் வலுவான கூட்டாண்மையையும் தொடர்ந்து கட்டியெழுப்பி வரும் நிலையில், நமது எதிர்காலம் மகத்தான பொருளாதார வளர்ச்சியையும் வாய்ப்புகளையும் கொண்டுள்ளது.

வலுவான இந்திய - இலங்கை கூட்டாண்மைக்குள் இணைந்து செயல்படுவதன் மூலம், மேலான செழிப்பையும் முன்னேற்றத்தையும் அடைவதற்கு தாம் ஆவலுடன் காத்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் உங்களுக்கும் தமிழக மக்களுக்கும் அனைத்து வெற்றிகளும் கிடைக்க இலங்கை மக்கள் சார்பாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தமது வாழ்த்துக்களை குறிப்பிட்டுள்ளார். (அ)

## ஈழத் தமிழர் விவகாரம்...

ஈழத்தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் மே 18ஆம் திகதியை "முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக" உலகெங்கும் வாழும் தமிழர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்தச் சூழலில், புதிய முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக அரசாங்கம், தனது முதலாவது சட்டசபை கூட்டத்தொடரிலேயே ஈழத்தமிழர் விவகாரம் குறித்த புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில், ஈழத்தமிழர் மீது நடைபெற்றது "இனவழிப்பு" என்றும், அதற்குச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை அவசியம் என்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை புதிய அரசு வழிமொழிய வேண்டும் என்று அதில் கோரப்பட்டுள்ளது.

தமிழகத்தின் புதிய அரசாங்கம் எடுக்கும் இந்த முன்னெடுப்பானது, சர்வதேசக் குற்றவியல் விசாரணையை வலியுறுத்திப் போராடி வரும் ஈழத்தமிழர்களுக்குப் பெரும் பலத்தைச் சேர்க்கும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வலியுறுத்தியுள்ளார். (அ)

## 3ஆவது இடம் பிடித்த...

ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் பெரும்பான்மை பலத்தை பெற்று ஆட்சியை அமைத்துள்ளது.

இதையடுத்து, சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பிரமாண்ட விழாவில் விஜய் தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராக பதவியேற்றார்.

பதவியேற்பு விழா ஆரம்பிக்கும் முன்னர் இசைக்கப்பட்ட நிகழ்ச்சி பாடல்களின் வரிசையே தற்போது சர்ச்சைக்குக் காரணமாகியுள்ளது.

அதன்படி, முதலில் "வந்தே மாதரம்", பின்னர் தேசிய கீதம் மற்றும் அதன் பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து தொடக்கத்தில் பாடப்பட்டு, தேசிய கீதம் இறுதியில் இசைக்கப்படுவது மரபாக இருந்து வருகிறது. ஆனால், இந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்தில் இடம்பெற்றமை சமூக ஊடகங்களில் கடும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், திமுக தரப்பில் இதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திமுக தகவல் தொடர்பு பிரிவு வெளியிட்டுள்ள பதிவில், "தமிழ்த் தாயை பின்னுக்குத் தள்ளியது தான் புதிய மாற்றமா?" எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மேலும், "தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகள் வழக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி தேசிய கீதத்துடன் நிறைவடையும்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தற்போது அரசியல் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. (அ)

## மக்களை திசை...

மேலும், பதவியேற்ற உடனேயே விஜய் கையெழுத்திட்டுள்ள அறிவிப்புகளையும் வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, "எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க. அதெல்லாம் இருக்கு. மக்களுக்குக் கொடுக்க மனசும், ஆட்சித் திறமையும்தான் வேண்டும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கோவிட், வெள்ளப் பாதிப்புகள் உள்ளிட்ட பல்வேறு சவால்களையும், ஒன்றிய பாஜக அரசின் ஒதுக்கீட்டு அரசியலையும் சமாளித்தபடியே தங்களது அரசு பல மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியதாகவும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "ரூபாய் 10 லட்சம் கோடி கடனை வைத்து விட்டு, கஜானாவைத் துடைத்து விட்டுச் சென்றுள்ளது கடந்த அரசு என்ற குற்றச்சாட்டை முதல் உரையிலேயே கூறியுள்ளீர்கள். அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு இருக்கிறது" என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்து கடந்த பெப்ரவரி மாத பட்ஜெட்டிலேயே தெளிவாக விளக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்ட அவர், "அதற்குப் பிறகுதான் நீங்கள் பல வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீர்கள். உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசைதிருப்பாதீர்கள்" எனவும் தெரிவித்துள்ளார்.

இறுதியாக, "மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றலாம் என்ற நிர்வாக நுணுக்கங்களை விரைவில் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன். தங்களின் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர மீண்டும் எனது வாழ்த்துகள்" என ஸ்டாலின் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

## சுகாதார ஒருங்கிணைப்பு...

இந்தப் பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் சுகாதார நிறுவனங்களுக்கு இடையே நிலவும் ஒருங்கிணைப்பு குறைபாடுகளை நீக்கி, வளங்களைச் சரியாகப் பகிர்ந்தளிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

மாவட்ட மட்டத்திலான சுகாதாரத் தேவைகளை மக்கள் பங்களிப்புடன் கண்டறிதல். அந்தத் தேவைகளை தேசிய மற்றும் மாகாண சுகாதாரத் திட்டங்களுடன் இணைத்தல். புதிய சுகாதாரத் திட்டங்களை அடையாளம் கண்டு அமைச்சுக்குப் பரிந்துரைத்தல். நடைமுறையிலுள்ள திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, உரிய காலத்திற்குள் நிறைவு செய்ய உதவுதல்.

இந்த புதிய பொறிமுறையூடாக நாட்டின் சுகாதார சேவையின் தரத்தை உயர்த்தி, மக்களுக்கு நம்பிக்கையான சேவையை வழங்க முடியும் என சுகாதார அமைச்சு எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. (அ)

## மின் கட்டண உயர்வு...

குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமையே இந்த மின் கட்டண அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளதாக அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

மின் உற்பத்தி செலவை நுகர்வோர் மீது சுமத்த வேண்டாம் என விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அரசாங்கம் முற்றாகப் புறக்கணித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய கட்டண அதிகரிப்பானது மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தினர், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## வளமான ஈழத்தை...

நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தமிழ்நாட்டின் புதிய முதல் அமைச்சருக்கு ஈழத்தமிழ் மக்கள் சார்பாக முழுமையான வாழ்த்துக்களை கூறுகின்றோம். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு அவர் கடினமாக உழைப்பார் என்று நம்புகின்றோம். அவர் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்த ஒருவர்.

இந்தியாவில் தமிழகம் பல விடயங்களில் வளர்ச்சியடைந்த ஒரு மாநிலமாக உள்ளது. அது அடுத்த கட்டம் நோக்கி செல்வதை ஈழத்தமிழர்கள் முக்கியமாக கருதுகின்றோம். தமிழகம் முன்னேறினால் அது ஈழத்தமிழர்களுக்கு நிறைய வாய்ப்புகளை உண்டாக்கும்.

ஈழத்தமிழர்களின் பிரச்னைகளை முழுமையாக புரிந்துகொண்டு இரண்டு தரப்பும் கைகோர்த்து செயற்படுமாக இருந்தால் நிச்சயமாக உலகத்தில் தமிழ் மக்களின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

விஜய் முதன்முறையாக வந்திருந்தாலும் கூட பெருமளவு மக்களின் கவனத்தை தன் பக்கம் திருப்பியுள்ளார். எனவே வளம் மிக்க தமிழகம் மாத்திரமல்லாமல் வளமான ஈழத்தை அமைப்பதற்கும் அவர் ஒத்துழைப்பார். ஒத்துழைக்க வேண்டும்.

கச்சதீவு விடயம் தொடர்பாக பேச வேண்டியது டில்லியும் கொழும்பும். கச்சதீவு தமிழகத்திற்கு சொந்தமாக வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. மீனவர் பிரச்சனையும் அதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

மீனவர் பிரச்னைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் கச்சதீவு விடயம் காணாமல் போய்விடலாம். இந்த பிரச்னைகளை தீர்ப்பதற்கான நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அங்கும் இருக்கிறார்கள் இங்கும் இருக்கிறார்கள். எனவே உறுதியான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்த விடயங்களில் புதிய முதல் அமைச்சர் இந்திய மத்திய அரசுடன் பேசி காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பு.

அத்துடன் இலங்கை அரசு புதிய அரசியல் யாப்பை கொண்டுவரும் பட்சத்தில் அதில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக எவ்வாறான விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதை தமிழ் தரப்பில் இருந்து ஒருமித்த குரலில் சொல்வதற்காக சட்டத்தரணிகள் பேரவையானது தமிழ் கட்சிகளை இணைத்து ஒரு குழுவை நியமித்துள்ளது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கலந்து கொண்டிருந்தது. ஆனால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகள் கலந்து கொள்கின்ற இடத்தில் தங்களால் கலந்து கொள்ள முடியாது என அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் அது தவறான ஒரு விளக்கம். அங்கு இல்லாவிடினும் அந்த கட்சியினர் உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களை வைத்துள்ளனர். கட்சியாக செயற்பட்டு வருகின்றனர். எனவே அது ஒரு பிரச்னைக்கு உரிய விடயமல்ல.

இது கட்சி சார்பான விடயமும் அல்ல. அது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுகின்றமை தொடர்பானது. எனவே ஒரே விதமாக ஒருமித்த கருத்தை தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும். எமது கூட்டணிக்குள் ஒருமித்த கருத்து உள்ளது. தமிழீழத்திற்காக போராடியவர்களே ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம்.

எனவே உச்சபட்சமான ஒரு சமஸ்டி அமைப்பு முறை என்பது தமிழ் மக்களின் இன பிரச்னையை தீர்க்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எனவே நாடு பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும், அமைதி இருக்க வேண்டும் முதலீடுகளை இங்கு கொண்டு வர வேண்டுமாக இருந்தால் இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு சமஷ்டி அரசியலமைப்பு அடிப்படையிலான தீர்வுக்கு அவர்கள் செல்ல வேண்டும் -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் நாளை முன்னிலையாகிறார் மகிந்த



கொழும்பு, மே. 11

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் நாளை செவ்வாய்க்கிழமை முன்னிலையாகுவேன். அழைக்கப்படும் சகல விசாரணைகளுக்கும் செல்வேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சிறீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கபில சந்திரசேனவின் பூதலுடலுக்கு அஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

கபில சந்திரசேன நாட்டுக்கு சேவையாற்றினார்.

இவரின் இறப்பு எமக்கு பாரியதொரு இழப்பாகும்.

அவரது இறப்புக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் செவ்வாய்க்கிழமை முன்னிலையாகுவேன். அழைக்கப்படும் சகல விசாரணைகளுக்கும் செல்வேன் என அவர் தெரிவித்தார். (அ)

## செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மரநடுகை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 11

உலக செஞ்சிலுவை தினத்தை சிறப்பிக்கும் முகமாக, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். கிளையினரால் நேற்று முன்தினம் விசேட மரநடுகை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 8 ஆம் திகதி உலக செஞ்சிலுவை தினமாக உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், சூழல் பாதுகாப்பினை வலியுறுத்தியும் இந்த நாளை நினைவுகூர்ந்தும் யாழ்ப்பாணத்தில் இந்த மரநடுகை செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைமை அலுவலக வளாகத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் ச. திரவியராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் கிளை இளைஞர் அணித் தலைவர் லின்ரன் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள், யாழ் கிளை இளைஞர் அணியினர் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டு இந்த நற்பணி நிகழ்வில் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

மனிதாபிமான பணிகளில் முன்னிற்கும் செஞ்சிலுவைச் சங்கம், இன்றைய உலகளாவிய காலநிலை மாற்றத்தைக் கருத்தில்கொண்டு இவ்வாறான பசுமைத் திட்டங்களை முன்னெடுப்பது பாராட்டுக்குரியது என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (எ)

## தையிட்டியில் பிரதேச சபையின் வீதியை மீட்கும் நடவடிக்கையை கைவிடவேண்டும்

### வலி. வடக்கு தவிசாளருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் வழக்கு

யாழ்ப்பாணம், மே. 11

தையிட்டியில் சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிக்குள் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிடவேண்டும் என பலாலி பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

தனியார் காணிகள், பிரதேச சபைக்கு சொந்தமான வீதி என்பவற்றை கையகப்படுத்தி தையிட்டிப் பகுதியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரைக்காக கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்குமாறு காணி உரிமையாளர்கள் போராட்டங்களை நடத்தி வரும் நிலையில், கடந்த 28ஆம் திகதி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக கூறி, காணி அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது காணி உரிமையாளர்கள், “காணிகளை விடுவிக்கவே அளவீடு செய்கிறோம்” என எழுத்தில் உறுதிமொழி கேட்ட நிலையில், நீண்ட இழுபறிக்கு பின்னர் காணிகளை அளவீடு செய்யும் பணிகள் கைவிடப்பட்டன.

இந்நிலையில், விகாரைப் பகுதிக்குள் அமைந்துள்ள வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதியை அளவீடு செய்ய தவிசாளர் சம்மதம் தெரிவித்ததை அடுத்து, வீதி அளவீடு செய்யப்பட்டது.

குறித்த வீதியை மறித்து அடைக்கப்பட்டுள்ள வேலியை இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் அகற்ற வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிரதேச சபை வேலியை அகற்றும், வேலியை அகற்றும் செலவீனத்தை விகாராதிபதி பிரதேச சபைக்கு வழங்கவேண்டும் என தவிசாளர் கடிதம் மூலம் விகாராதிபதிக்கு அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து பிரதேச சபை விகாரை வேலியை அடாத்தாக அகற்ற முற்படுவதாக பலாலி பொலிஸில் விகாராதிபதி முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம், தவிசாளரை பலாலி பொலிஸார் அழைத்து வேலியை அகற்றினால், இனங்களுக்கு இடையில் பிரச்னைகள் ஏற்பட்டு நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும். எனவே வேலியை அகற்றும் பணிகளை கைவிட வேண்டும் என அச்சுறுத்தும் தொனியில் கூறியுள்ளனர்.

அதற்கு தவிசாளர் மறுப்பு தெரிவித்து பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை விகாராதிபதியே அடாத்தாக கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும், வீதியை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் உறுதியாக கூறி இருந்தார்.

இதனை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை வலி.வடக்கு பிரதேச சபை வீதியை மீட்கும் பணியை கைவிடவேண்டும் என்றும், அதற்கு எதிராக நீதிமன்று தடையுத்தரவு வழங்க வேண்டும் எனவும் பலாலி பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணையின்போது, ஒரு தலைப்பட்சமாக விசாரணை செய்ய முடியாது எனக் கூறிய மன்று, வலி. வடக்கு தவிசாளரை இன்று திங்கட்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

### இலங்கை கரையோர பாதுகாப்பு படைக்கு

## 12 கண்காணிப்பு ட்ரோன்களை கையளித்தது ஆஸி அரசாங்கம்

கொழும்பு, மே 11

அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படையின் “ஒப்ரேஷன் சாவரின் பார்டர்ஸ்“ கூட்டு முகமை பணிக்குழுவின் தளபதியும், கடல்சார் எல்லைக் கட்டளைத் தளபதியுமான ரியர் அட்மிரல் பிரட் சோன்டர் 12 நவீன கண்காணிப்பு ட்ரோன்களை இலங்கை கரையோர பாதுகாப்புப் படை பிரிவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார்.

மிரிஸ்சவிலுள்ள கரையோர பாதுகாப்புப் படை தலைமையகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இலங்கை கரையோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ரோஹன் ஜோசப் இந்த உபகரணங்களைப் பெற்றுக்கொண்டார்.

மேலும், இந்த நிகழ்வில் இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மெத்யூ டக்வொர்த் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் இன்ஸ்பெக்டர் பால் எட்வர்ட்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதே ட்ரோன் வழங்கப்பட்டமையின் முக்கிய நோக்கமாக சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படைக்கும் இலங்கை கரையோர பாதுகாப்புப் படைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவை இந்த நிகழ்வு மேலும் உறுதிப்படுத்தியுள்ளதாக நம்பப்படுகின்றது.

கடல்சார் எல்லை முகாமைத்துவத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் வலுவான ஒத்துழைப்பை இது பறைசாற்றுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், எதிர்காலத்தில் இரு நாட்டு பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கூட்டு நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ)

## யாழ்.போதனா வைத்தியசாலை தீ; தடயவியல் பொலிஸார் தீவிர ஆய்வு

யாழ்ப்பாணம், மே. 11

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருந்து களஞ்சியம் தீ பிடித்த நிலையில் அப்பகுதியில் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் தடய ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை இன்று திங்கட்கிழமை கொழும்பில் இருந்து அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகள் நேரில் வந்து சோதனையிடவுள்ள நிலையில், குறித்த பகுதி குற்றப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தலைமன்னார் வீதியில் நடந்த விபத்தில் 9 பேர் படுகாயம்

மன்னார், மே. 11

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள கரிசல் பகுதியில் நேற்றுக் காலை மினி வான் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தபோது, திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பனை மரம் ஒன்றுடன் பலமாக மோதியுள்ளது.

இந்த விபத்து இடம்பெற்ற போது வாகனத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமைக்காக சென்று கொண்டிருந்த தொழிலாளர்களே இருந்துள்ளனர்.

விபத்தில் சிக்கிய 9 பேரும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மீட்கப்பட்டு, உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## கிளிநொச்சி அம்பாள்குளத்தில் 2 குழுக்களுக்கிடையே மோதல்!

### நான்கு பேர் படுகாயம்

கிளிநொச்சி, மே. 11

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள் குளம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மோதலில் நான்கு பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைகளுக்காக படுகாயமடைந்த ஒருவர் கொழும்பு வைத்தியசாலைக்கும் மற்றையவர் அனுராதாபுரம் வைத்தியசாலைக்கும் மற்றும் ஒருவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளதுடன் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இரண்டு வாகனங்கள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, வாள், கத்திகள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மாவட்ட விசேட குற்றத்த தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.